isentia
AUTHOR: No author available SECTION: NEWS PAGE: 3 PRINTED SIZE: 214.00cm² REGION: KL
MARKET: Malaysia PHOTO: Full Color ASR: MYR 1,245.00 ITEM ID: MY0048673520



24 JUN, 2022

# Cash aid useless if electricity tariffs rise, PH leaders tell govt

Malaysian Nanban, Malaysia



# மின்சார கட்டணத்தை உயர்த்தினால் மக்கள்தான் பாதிக்கப்படுவார்கள்

கோலாலம்பூர், ஜூன் 24-

மின்சார கட்டணம் உயர்த்தப்பட்டால் மக்களுக்கான கூடுதல் உதவித் தொகை என்பதில் எந்த அர்த்தமும் கிடையாது என்று நம்பிக்கைக் கூட்டணி தலைவர்கள் கூறுகின்றனர்.

கோழி மற்றும் முட்டைகளுக்கான உச்ச வரம்பு விலை ஜூலை 1 ஆம் தேதி அகற்றப்படுகிறது என்று பிரதமர் டத்தோஸ்ரீ இஸ்மாயில் யாக்கோப் அறிவித்திருக்கிறார்.

அதே வேளையில் அடுத்த மாதம் மின்சார கட்டணம் உயர்த்தப்படும் என்று தெனாகா நேஷனல் பெர்ஹாட் நிறுவனம் கூறுகிறது.



இந்நிலையில் மலேசியக் குடும்ப உதவித் தொகை 100 வெள்ளி அதிகரிக்கப்படுகிறது. அடுத்த வாரம் 500 வெள்ளி உதவி தொகையாக வழங்கப்படும் என்றும் சப்ரி அறிவித்திருக்கிறார்.

இது குறித்து கருத்துரைத்த போது, கடந்தாண்டு மலேசியக் குடும்ப உதவி தொகையாக 359 கோடி வெள்ளி வழங்கப்பட்டது என்றும் இந்த ஆண்டு அந்த தொகை 360 கோடியாக உயர்த்தப்படுகிறது என்றும் பிரதமர் கூறியிருப்பது யாருக்கு எந்த பலனையும் கொடுக்காது என்று ஜசெக தலைவர் லிம் குவான் எங் தெரிவித்தார்.

உதவித் தொகை அதிகரிக்கிறது என்று கூறியிருக்கின்ற வேளையில் மின்சார கட்டணத்தையும் உயர்த்தினால் அது மக்களுக்கு பெரும் சுமையாக அமையும் என்று அவர் கூறினார்.

பொருட்களின் விலைகள் நாளுக்கு நாள் அதிகரித்து கொண்டிருக்கின்றன. அதை கட்டுப்படுத்த வேண்டும். இல்லையேல் உதவித் தொகை வழங்குவதில் எந்த அர்த்தமும் கிடையாது என்று அமானா கட்சியின் துணை தலைவர் சலாஹுடீன் ஆயூப் தெரிவித்தார்.

Provided for client's internal research purposes only. May not be further copied, distributed, sold or published in any form without the prior consent of the copyright owner.